**இந்து சமய அறநிலையத்துறை**

**தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானம், தஞ்சாவூர்**

பொது ஏலம் விளம்பர அறிவிப்பு தொலைபேசி எண் : 223384

தஞ்சாவூர் அரண்மனை தேவஸ்தானத்துடன் இணைந்த பிர்கா 7 வடகுரங்காடுதுறை அருள்மிகு தயாநிதீஸ்வரர் திருக்கோயிலுக்கு சொந்தமான கீழ்கண்ட விவரப்படி உள்ள உரிம இனங்களை 13.07.2022 புதன்கிழமை அன்று முற்பகல் 11.30 மணியளவில் அறநிலையத்துறை அதிகாரிகள் முன்னிலையில் பகிரங்க ஏலத்தில் உரிமத்திற்கு (லைசென்சுக்கு) விடப்படும். ஏலத்தில் கலந்துகொள்ள விருப்பம் உள்ளவர்கள் கீழே குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஏலத்தில் கலந்து கொள்ள வேண்டும்.

**// ஏல நிபந்தனைகள் //**

1. ஏலத்தில் கலந்து கொள்ள விருப்பமுள்ளவர்கள் ஏல வைப்புத்தொகை பின் கண்ட விவரப்படி ஏலம் துவங்குவதற்கு முன்னரே செலுத்தி ஏலத்தில் கலந்து கொள்ள வேண்டும்.
2. பொதுவாக ஏலம் உயர்ந்த கேள்விக்குத்தான் உறுதி செய்யப்படும். ஆனால் ஏலம் உறுதி செய்வது இந்து சமய அறநிலையத் துறையின் அங்கீகாரம் / இரத்து அங்கீகாரத்திற்கும் உட்பட்டது ஆகும்.
3. ஏலத்தை நிராகரிக்கவோ, வேறு தேதிக்கு ஒத்தி வைக்கவோ, தேவஸ்தான நிர்வாகத்திற்கு முழு உரிமை உண்டு.
4. தேவஸ்தானத்திற்கு எவ்விதத்திலேனும் தொகை செலுத்த வேண்டியவர்கள் தேவஸ்தான பணியாளர்கள் மற்றும் அவர்களின் வாரிசுகள், நிலுவை வைத்திருப்பவர்கள் ஏலத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
5. ஏலம் உறுதி செய்யப்பட்டவர், ஏலத்தொகை முழுவதையும் உடனே ஸ்தலத்தில் செலுத்தி விட வேண்டும்.
6. ஏலம் உறுதி செய்யப்படாதவரின் டேவணித்தொகை, உடனே ஸ்தலத்தில் திருப்பித் தரப்படும்.
7. ஏலம் உறுதிசெய்யப்பட்டவர் ஏலத்தொகையை நிபந்தனை எண் **5** –ன்படி செலுத்த தவறினால் மறு ஏலம் விடப்படும். அதனால் ஏற்படும் சகல இழப்புகளையும் ஏலம் உறுதி செய்யப்பட்டவரிடம் வசூலிக்கப்படும். லாபம் வந்தால் அதில் அவருக்கு எவ்வித பாத்தியதையும் கிடையாது.
8. ஏலம் யார் பெயருக்கு உறுதி செய்யப்படுகிறதோ அவர் தம் கெடு முடியும் வரை மட்டுமே ஏலப்பொருளை அனுபவிக்க உரிமம் பெற்றவராக (Licence) பாவிக்கப்படுவார். எக்காரணம் கொண்டும் ஏலப்பெருளை அனுபவிக்க வழங்கப்பட்ட உரிமத்தை வேறு யார் பெயருக்கும் மாற்றவோ, உள் வாடகைக்கு விடவோ அனுமதியில்லை. அவ்வாறு தேவஸ்தான அனுமதியில்லாமல் வேறு நபருக்கு மாற்றவோ, உள் வாடகைக்கு விட்டாலோ ஏலத்தை ரத்து செய்து உரிமத்தைத் தேவஸ்தானத்தாரால் ஸ்தலத்திலேயே சுவாதீனம் செய்து கொள்ளப்படும்.
9. தேவஸ்தான மதிப்பிற்கு ஏலம் போகவில்லையானால் காரணம் கூறாமல் ஏலத்தை நிறுத்த தேவஸ்தானத்திற்கு உரிமையுண்டு.
10. ஏலம் உயர்ந்த கேள்வி கேட்பவர்களுக்குத்தான் உறுதி செய்யப்படும். ஆனால் ஏலதாரர் ஏலத்தொகை முழுவதையும் செலுத்தவில்லை என்றால் காரணம் கூறாமல் மறு ஏலத்திற்கு மாற்ற தேவஸ்தானத்திற்கு முழு அதிகாரம் உண்டு.
11. ஏல உரிமம் ஒரு பசலிக்கு (ஜீலை முதல் ஜீன் முடிய) அதாவது 1432 ஆம் பசலிக்கு மட்டுமே ( 01 - 07 - 2022 முதல் 30 - 06 – 2023 முடிய ) உள்ள காலத்திற்கு மட்டும் ஆகும்.
12. ஏலம் தனக்காகத்தான் கேட்க வேண்டுமே தவிர, பிறருக்காக ஏலம் கேட்கக் கூடாது.
13. உறுதி செய்யப்படும் ஏலங்கள் அனைத்தும் அறநிலையத்துறை ஆணையர் / இணை ஆணையர் அவர்கள் அங்கீகாரத்திற்குட்பட்டது.
14. ஏல சமயத்தில் ஏற்படும் அனைத்து சந்தேகங்களுக்கும் தேவஸ்தானத்தார் கூறும் விளக்கமே இறுதியானது.
15. ஏல சமயத்தில் விதிமுறைகளை கூட்டவோ, குறைக்கவோ தேவஸ்தானத்திற்கு முழு உரிமை உண்டு.
16. ஏலம் கேட்பவர்கள் ஏலப் பொருள்களை ஸ்தலத்திலேயே நேரில் பார்வையிட்ட பின்னரே ஏலத்தில் கலந்து கொண்டதாகக் கருதப்படுவர்.
17. ராஜீகம், தெய்வீகம் ஆகியவற்றால் ஏற்படும் பாதிப்புகளுக்கு தேவஸ்தானம் பொறுப்பாகாது
18. ஏலதாரர்கள் ரூ.500/- க்கு மேல் உள்ள டேவணித் தொகைகளை வங்கி வரைவோலையாக (தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில்) எடுத்து செலுத்தி, ஏலத்தில் கலந்து கொள்ள வேண்டும். எக்காரணம் கொண்டும் டேவணித் தொகை ரொக்கமாகவோ, காசோலையாகவோ, பெறப்படமாட்டாது.

**வங்கி வரைவோலை எடுக்கப்பட வேண்டிய முகவரி :**

**ASSISTANTT COMMISSIONER / TREASURER & MANAGER,**

**THANJAVUR PALACE DEVASTHANAM, THANJAVUR - 613 009.**

19. ஏலம் எடுத்த நபர் தம்மால் எடுக்கப்பட்ட ஏல இனத்தின் முழு தன்மையையும் நன்கு அறிந்து ஏலம் எடுப்பதாக கருதப்படும். எனவே, இவ்வினத்தால் ஏற்படும் அனைத்து இலாப, நட்டங்கள் அல்லது வழக்குகள் ஆகியவற்றிற்கு ஏல உரிமதாரரே முழு பொறுப்பு ஆவார்.

20. ஏலம் எடுத்த நபர் ஏலத்தொகை முழுவதையும் ஸ்தலத்தில் செலுத்தி ஏல தினத்தன்றே அச்சு இரசீது பெற்றுக்கொள்ள வேண்டும். அச்சு இரசீது இருந்தால் மட்டுமே துறை அனுமதிக்கு உரிமம் வழங்க துறைக்கு விண்ணப்பிக்கப்படும் தவறின் மறு ஏலம் விடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
21. ஏலம் ஊர்ஜிதமான நபர் ஏலத்தொகை முழுவதும் செலுத்தப்பட்டதற்கான தேவஸ்தான உதவி ஆணையர் அவர்களின் சான்று காண்பித்தால் மட்டும் ஏல இனத்தை அனுபவிக்க அனுமதிக்கப்படும்.
22. ஏலம் உறுதி செய்யப்பட்டவர்கள், தனது சொந்த செலவில் ரூ.100/– முத்திரைத்தாளில் உரிம ஒப்பந்தப் பத்திரம் எழுதி கொடுத்த பின்னரே பசலி 1432 க்கான உரிமம் வழங்கப்படும்
23. ஏலம் எடுப்பவர் தொல்பொருள் துறை பராமரிப்புக்கு இடையூறாக இருக்கும் மரக்கிளைகளை அப்புறப்படுத்தி கொள்ள வேண்டும் என்ற நிபந்தனைகளுக்கு உட்பட்டு ஏலம் விடப்படுகிறது.

**ஏல விவரம்**

1. **ஏல தேதி : 13.07.2022 புதன்கிழமை முற்பகல் 11.30 மணி**
2. **ஏலம் நடைபெறும் இடம் : தஞ்சாவூர் அருள்மிகு விஜயராமர் திருக்கோயில் வளாகத்தில் இயங்கும் மத்திய அலுவலகம்**

**ஏல இனங்கள் விபரம்**

| திருக்கோயில் பெயர் | ஏல இனங்கள் விவரம் | டேவணித் தொகை ரூ. |
|---|---|---|
| அருள்மிகு தயாநிதீஸ்வரர் திருக்கோயில், வடகுரங்காடுதுறை | புல எண் 194/2–ல் ஏக்.2.67 நஞ்சை மகசூல் உரிமம் | 500/– |
| | புல எண் 195/1–ல் ஏக்.1.00 நஞ்சை மகசூல் உரிமம் | 500/– |
| | புல எண் 195/1–ல் ஏக்.1.00 நஞ்சை மகசூல் உரிமம் | 500/– |
| | புல எண் 194/1–ல் ஏக்.0.66 நஞ்சை மகசூல் உரிமம் | 500/– |
| | புல எண் 55/2–ல் ஏக்.0.45 நஞ்சை மகசூல் உரிமம் | 500/– |
| | திருக்கோயில் உள்பிரகார தென்னை 3–ன் மேல் மகசூல் உரிமம் | 500/– |

(ஒம்). கோ. கவிதா
உதவி ஆணையர்/ பொருளாளர் மற்றும் மேலாளர்